சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள்: 05.11.2025

வா.சா.2 – தாஜிதீன் S/oமுகமது ராவுத்தர்

O.S. No.186/2022

(சாட்சி மனுவின் பேரில் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

குறுக்கு விசாரணை :

வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்திருந்தார், அதை காலி செய்ய வேண்டி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். வழக்கு சொத்து 3 இன சொத்துக்களாக கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு சொத்துக்கள் என்னுடைய சொத்துக்கள் அல்ல என்றால் என் மனைவியின் சொத்துக்கள் ஆகும். வழக்கு சொத்துக்கள் மனைவி அவருடைய சொந்த சம்பாத்தியத்தை கொண்டு வாங்கிய சொத்துக்கள் அல்ல என்றால் சரிதான். அவர் பெயரில் அவருடைய அப்பா வாங்கி வைத்த சொத்துக்கள் ஆகும். 1988ம் ஆண்டு என் மாமனாரான சிக்கந்தர் ராவுத்தர்,அங்கயர்கண்ணி அம்மாள் மற்றும் அவரது மகன் ராமலிங்கம் ஆகியோரிடம் இருந்து பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலமாக வழக்கு சொத்தை வாங்கிவைத்தார். என் மனைவி பெயர் சாயிராபானு என்ற சாயிராபீவி ஆவார். நான் சொல்லும் ஆவணங்கள் வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் மூலமாக தான் என் மனைவிக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பது என்னுடைய கட்சி என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் என் மாமியார் நாகூரம்மாள் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் ஆகும். நாகூரம்மாள் 1996ல் காலமாகிவிட்டபடியால் என் மனைவி தான் ஒரே வாரிசு

என்ற முறையில் அந்த சொத்து என் மனைவிக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். நான் முன்பு வெளிநாட்டில் சௌதிஅரேபியாவில் 1988 – 2021 வரை இருந்தேன். அதன்பிறகு நிரந்தரமாக இந்தியாவிற்கு வந்துவிட்டேன். என்னுடன் சௌதிஅரேபியாவில் என் மனைவி சாயிராபானுவும் உடன் வந்திருந்தார் என்றால் சரிதான். 2004ம் ஆண்டு ஒய்யம்மாள் என்ற தொழுநோயால் பாதிக்கப்ட்டிருந்தார் அவர் ஆதரவற்ற நிலையில் இருந்ததால் அவரிடம் எங்களுடைய அனுமதியின் பேரில் வழக்கு சொத்தில் தங்கமட்டும் அனுமதி அளித்திருந்தோம். ஒய்யம்மாள் 1ம் பிரதிவாதி தாமரைசெல்வியின் மாமியார் ஆவார். 2ம் பிரதிவாதி அவருடைய உறவினர் ஆவார். ஒய்யம்மாள் 2021ம் ஆண்டு காலமாகிவிட்டார். 2021ம் ஆண்டு நாங்கள் சௌதியில் இருந்தபோது ஒய்யம்மாள் எங்களை தொடர்பு கொண்டு வழக்கு சொத்தை எங்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று கேட்டுகொண்டார். அப்போது கொரானா காலகட்டம் என்பதால் உடனடியாக இந்தியா திரும்பமுடியவில்லை. அதற்குள் ஒய்யம்மாள் காலமாகிவிட்டார். அதற்குள் பிரதிவாதிகள் சொத்தை ஆக்கிரமித்து கொண்டார்கள். 2004க்கு முன்பு வரை சொத்தின் அனுபவம் எங்களிடம் தான் இருந்து வந்தது. வழக்கு சொத்தை 1997ம் ஆண்டே 1ம் பிரதிவாதி தாமரைசெல்வியின் கணவரான ஹரிஹரமுருகன் என்ற நபரிடம் சொத்தை கிரையத்திற்கு விலைபேசி முன் பணம் பெற்று கொண்டு சௌதியில் இருந்து வந்தவுடன் சொத்தை கிரையம் முடித்து கொடுப்பதாக வாக்களித்தேன் என்றால் சரியல்ல. 2004ம்ஆண்டுக்கு பிறகு ஒய்யம்மாளுக்கு அனுபவத்திற்கு சென்றிருந்தால் அதற்கு முந்தைய காலகட்டத்தில் பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்தை பொறுத்து எந்த ஆவணமும் குடியிருந்ததற்கு அடையாளமாக தாக்கல் செய்திருக்க முடியாது என்றால் சரிதான். ஹரிஹரமுருகனை எனக்கு தெரியும் எங்கள் ஊர்க்காரர் தான். வழக்கு சொத்து 10 செண்டு ஆகும். வழக்கு சொத்தின் சந்தை மதிப்பு தற்போது எவ்வளவு இருக்கும் என்றால் எனக்கு தெரியாது.

சொத்தை ஒய்யம்மாளிடம் ஒப்படைப்பதற்கு முன்னர் எங்களுக்குள் ஒப்பந்தம் எதுவும் ஏற்பட்டதா என்றால் இல்லை. வழக்கு சொத்து தொடர்பான அனைத்து நடைமுறைகளும் எனக்கு தெரியும் என்றால் வாங்கியது பற்றி எல்லாம் எனக்கு தெரியாது. அதன்பின்னர் உள்ளது தான் தெரியும். 1986ம் ஆண்டு தான் எனக்கு திருமணம் நடந்தது. ஒய்யம்மாளிடம் வழக்கு சொத்தை ஒப்படைப்பதற்கு முன்னர் ஒரு ஒப்பந்தம் ஏன் போட்டுகொள்ளவில்லை என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் அவரிடம் இடத்தை ஒப்படைத்து சென்றோம். 1ம் பிரதிவாதியின் கணவரான ஹரிஹரமுருகன் என்பவரிடம் 1997ம் ஆண்டு 50000ரூபாய் முன்பண தொகையை பெற்று கொண்டு நானும், எனது மனைவியும் பெற்று கொண்டு சௌதி சென்றுவிட்டு வந்து கிரையம் முடித்து கொடுப்பதாக உறுதியளித்து சென்றோம் என்றும் அதன்காரணமாக பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் என்னுடைய அனுமதியுடன் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஹரிஹரமுருகன் தான் 50000ரூபாய் முன்பணத்தை நம்பிக்கையின் அடிப்படையில் எங்களிடம் கொடுத்து சொத்தை சுவாதீனம் எடுத்து கொண்டார் என்றும் நாங்கள் தான் அவரிடம் கிரையம் முடித்து கொடுக்காமல் வாக்கு தவறிவிட்டோம் என்றால் சரியல்ல. 1997ல் ஏற்பட்ட வாய்மொழி ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஹரிஹரமுருகன் மற்றும் அவரது மனைவி, ஆகியோர் வழக்கு சொத்தில் சுவாதினத்தில் அனுமதியின் பேரில் இருந்து வந்தார்கள் என்றும் ஆனால் அதை மறைத்து 2022ம் ஆண்டு சொத்து சுவாதினம்கேட்டு வழக்கை தாக்கல் செய்திருப்பது தவறு என்றால் சரியல்ல. ஆகவே நாங்கள் தாக்கல் செய்திருக்கும் வழக்கு செல்லத்தக்கதல்ல என்றும், நாங்கள் சொத்தை கிரையம் முடித்து கொடுக்காமல் காலம்தாழ்த்தி வந்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை என் மனைவியின் தகப்பனார் சிக்கந்தர், அங்கயற்கண்ணி என்ற நபரிடம் இருந்து என் மனைவி பெயரிலும், என் மாமியார் பெயரிலும் கிரையம்

பெற்றுள்ளார். அந்த அங்கயற்கண்ணி எப்போது இறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. (மேலும் குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.11.05 21:36:04 +0530

Sub Judge

Melur